**தலைப்பு 228 – நீதிமன்ற நிருவாக திணைக்களம் தொடர்பான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை 2017 ஆம் ஆண்டு**

---

2017 இன் 32 ஆம் இலக்க ஒதுக்கீட்டு (திருத்த) சட்டத்தினால் திருத்தப்பட்ட 2016 இன் 24 ஆம் இலக்க ஒதுக்கீட்டுச் சட்டத்தின் முதலாவது அட்டவணையிலும் மூன்றாவது அட்டவணையிலும் குறிப்பிடப்பட்ட தலைப்பு மற்றும் விடய இலக்கம் என்பவற்றின் கீழ் ஒதுக்கீட்டுக் கணக்கு மற்றும் இணக்கக் கூற்று, நீதிமன்ற நிருவாக திணைக்களத்தினால் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டன. அக்கணக்குகளிலிருந்தும் இணக்கக் கூற்றுக்களில் இருந்தும் நிரூபணமாகும் நிதி மற்றும் பௌதீக செயலாற்றல் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் கணக்காய்வு செய்யப்பட்டன.

**1.2 பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின், கணக்கீட்டு உத்தியோகத்தரின் மற்றும் வருமானக் கணக்கீட்டு உத்தியோகத்தரின் நிதி முகாமைத்துவம் மற்றும் கணக்களித்தன்மை தொடர்பான பொறுப்பு**

---

இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப் பிரமாணக் கோவையின் நிதிப்பிரமாணம் 124 பிரகாரம் அரசின் பண உழைப்பு மற்றும் அரசிற்கு கிடைக்க வேண்டிய பணத்தை சேகரித்தல் உட்பட அரசின் சகல நிதி நடவடிக்கைகளின் மேற்பார்வை தொடர்பாக பொது அதிகாரமும் நிதி அமைச்சருக்கு கையளிக்கப்பட்டுள்ளது. நிதி அமைச்சரால் அப்பொறுப்புக்களை நிறைவேற்றும் பொருட்டு நிதிப்பிரமாணம் 124(2) பிரகாரம் பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர். நிதிப்பிரமாணம் 125(1)(அ) பிரகாரம் திணைக்களத் தலைவர் தனது திணைக்களத்தின் சகல பணக்கொடுக்கல் வாங்கல்கள் தொடர்பாக கணக்கீட்டு உத்தியோகத்தராக இருப்பதுடன் வருமான கணக்கீட்டு உத்தியோகத்தர் திறைசேரியினால் நியமிக்கப்பட்டுள்ளது. பாராளுமன்றத்தினால் விதிக்கப்படும் வரையரைகளுக்குள்ளே தமது கடமைகளை நிறைவேற்றி சமர்ப்பிக்கப்படுகின்ற கணக்குகள் மற்றும் இணக்கக்கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 148, 149, 150 மற்றும் 152 ஆம் உறுப்புரைகள், ஏனைய நியதிச்சட்ட ஏற்பாடுகள், அரசாங்க நிதி மற்றும் நிருவாகப் பிரமாணங்களுக்கு இணங்க பேணுதல், தயாரித்தல் மற்றும் நியாயபூர்வமானதாக சமர்ப்பிப்பதற்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளைத் திட்டமிடல், செயற்படுத்தல் மற்றும் பேணுதல் என்பன இப்பொறுப்பில் உள்ளடக்கப்பட்டுள்ளன.

## 1.3 கணக்காய்வு நோக்கெல்லை

-------------------------------------------------------

தலைப்பு 228 – நீதிமன்ற நிருவாக திணைக்களத்தின் 2017 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதி மற்றும் பௌதீக செயலாற்றல் தொடர்பாக திட்டமிடல், அரச செலவினங்கள், அரச வருமானங்கள், மனித மற்றும் பௌதீக வள முகாமைத்துவம், உள்ளக கட்டுப்பாட்டு ஏற்பாடுகளைப் பயன்படுத்துதல், சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுக்கு இணங்குதல் மற்றும் புத்தகங்கள், பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் இணக்கக் கூற்றுக்களை நாளதுவரையாக பேணுதல், கணக்குகளைத் தயாரித்து உரிய காலப்பகுதியில் சமர்ப்பித்தல், செயலாற்றல் குறிகாட்டிகளை அடிப்படையாகக் கொண்டு உரிய தரப்பினருக்கு செயலாற்றல் அறிக்கைகளை விநியோகித்தல் தொடர்பாக இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. மீளாய்வாண்டிற்கான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2018 அக்தோபர் 25 ஆந் திகதி நீதிமன்ற மற்றும் சிறைச்சாலை மறுசீரமைப்பு அமைச்சின் செயலாளருக்கு வழங்கப்பட்டது. கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள், கருத்துரைகள் மற்றும் கண்டுபிடிப்புக்கள் என்பன கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்ட திட்டங்கள், கணக்குகள், இணக்கக் கூற்றுக்கள் மற்றும் செயலாற்றல் அறிக்கைகள் தொடர்பான மீளாய்வு, கொடுக்கல் வாங்கல்களின் மாதிரிகளது போதியளவான செவ்வை பார்த்தல்கள் என்பவற்றின் அடிப்படையில் எழுந்தனவேயாகும். அவ்வாறான மீளாய்வினதும், செவ்வை பார்த்தலினதும் நோக்கெல்லையும் பரப்பும் என்னால் பெற்றுக்கொள்ளக் கூடியதாகவிருந்த பதவியணியினர், ஏனைய வளங்கள், காலம் என்பவற்றின் வரையறைக்குட்பட்டு இயலுமான அளவில் விரிவானதோர் கணக்காய்வு ஒன்றினை மேற்கொள்ளக்கூடிய முறையில் தயாரிக்கப்பட்டதாகும்.

## 1.4 கணக்காய்வு அவதானிப்புக்கள்

-----------------------------------------------------

2017 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்காக நீதிமன்ற நிருவாகத்தில் மேற்கொள்ளப்பட்ட கணக்காய்வின் போது கண்டறியப்பட்ட கணக்காய்வு அவதானிப்புக்கள் மேற்படி 1.3 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கையில் விரிவாக காண்பிக்கப்பட்டுள்ளன. அந்த அவதானிப்புகளிலிருந்து பொருண்மையான மற்றும் முக்கியத்துவமான கணக்காய்வு அவதானிப்புகள் இந்த அறிக்கையின் 2.1 ஆம் பந்தி முதல் 2.12 வரையான பந்திகளில் குறிப்பிடப்பட்டுள்ளன. நிதி நிர்வாகத்தின் போதுமானதன்மையினை உறுதிப்படுத்தப்படும் வகையில் இலங்கை சனநாயக சோசலிசின் குடியரசு நிதிப் பிரமாணக் கோவையின் நிதிப்பிரமாணம் 128 இல் குறிப்பிடப்பட்ட ஏற்பாடுகளை நிறைவேற்றும் போது

கண்டறியப்பட்ட பின்வரும் குறிப்பில் பொழிப்பாக்கப்பட்டு காண்பிக்கப்பட்டுள்ள கணக்காய்வு அவதானிப்புக்களுக்கு உட்பட கணக்கீட்டு உத்தியோகத்தராக தமது கணக்களிதன்மையை திருப்திகரமாக நிறைவேற்றியுள்ளதாக அவதானிக்கப்பட்டது.

| நிதிப்பிரமாணம் | 128 கணக்கீட்டு உத்தியோகத்தரின் கணக்களித்தன்மை | கணக்கீட்டு உத்தியோகத்தர் அந்த ஏற்பாடுகளுடன் இணங்காதிருந்தமை | அவதானிப்புக்கள் உள்ளடக்கப்பட்ட அறிக்கையின் பந்தியுடனான தொடர்பு |
|---|---|---|---|
| நிதிப் பிரமாணம் | | | |
| 128(1)(அ) | அரசினால் நிர்ணயிக்கப்பட்டு குறிப்பிடப்பட்டுள்ள கொள்கை மற்றும் அதிகாரம் வழங்கப்படும் நடவடிக்கைகளுக்காக நிதி ஏற்பாடு செய்து கொடுப்பதில் பாராளுமன்றத்தின் சவால்களை கவனத்திற்கொண்டு தமது திணைக்களத்தின் நடவடிக்கைகள் வெளிப்படை தன்மையுடன் திட்டமிடப்பட்டு செயற்படுத்துவதாகவும் நடப்பாண்டிற்கான நிர்ணயிக்கப்பட்ட நிகழ்ச்சித் திட்டங்களை பூர்த்தி செய்வதற்கும் அல்லது நிர்ணயிக்கப்பட்ட இலக்குகளை நிறைவேற்றுவதற்கு முயற்சி எடுத்தல். | 1. செயல்நடவடிக்கைத் திட்டம் சரியாக தயாரித்திருக்கவில்லை. | 2.1(அ) |
| | | 2. பாதீட்டு மதிப்பீடு நடைமுறை சாத்தியமாக தயாரித்திருக்காமை | 2.7 |
| | | 3. பதிவேடு மற்றும் புத்தகங்கள் பேணப்படாமை | 2.10 |
| | | 4. பெறுகை செயன்முறை செயற்படுத்துவதில் குறைபாடுகள் | |

| | | |
|---|---|---|
| 128(1)(ஆ) | தமது திணைக்களத்தின் நிதிக் கட்டுப்பாடு மற்றும் கணக்கீட் டிற்காக அமைப்பு வெற்றிகரமா னது எனவும் தேவையான சந்தர்ப்பங்களில் அரசுக்கு கிடைக்க வேண்டிய கட்டணங் களை பிழையின்றியும் தீர்மானிப்பதற்கு அவற்றை முறைப் பிரகாரகும் முற்றாகவும் தாமதமின்றியும் சேகரிப்பதற்கு மற்றும் கிடைக்கும் பணத்தை கணக்கீடு செய்வதற்கும், அரசின் சார்பாக பொறுப்புக்களை மேற்கொள்வதற்கு அதிகாரம் அளிப்பதற்காகவும் நிறை வேற்றப்பட்ட சேவைகள் வழங்குவதின் மேற்பார்வை மற்றும் பரிசோதனை செய்வதற்கு மற்றும் அந்த அரச நிதியத்தில் இருந்து தாமதமின்றியும் பிழையின்றியும் கொடுப்பனவு செய்வதற்கு அவற்றில் போதியளவு ஏற்பாடுகள் மேற்கொள்வது எனவும், | 1. மனித வள முகாமைத் துவத்தில் குறைபாடுகள்<br>2. செயற்திட்டங்கள் பூர்த்தி செய்யாமல் கைவிடல்<br>3. செயற்திட்டங்கள் நிறை வேற்றுவதில் தாமதம் |
| 128(1)(இ) | நிதிப்பிரமாணங்கள் மற்றும் அரச ஏனைய மேலதிக ஏற்பாடுகள் தமது திணைக்களத்தினால் கடை பிடிக்கப்படுவதாகவும் மற்றும் தேவையான சந்தர்ப்பங்களில் அவற்றிற்கு மேலதிகமாக திணைக்கள ஏற்பாடுகள் வழங்குவதாகவும், | 1. இணக்கமின்மைகள்<br>2. கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ குழுக்கள் நடாத்தாமை<br>3. பொது வைப்புக் கணக் குகளில் குறைபாடுகள் |

| | | |
|---|---|---|
| 128(1)(உ) | அரசுக்கு சொந்தமான அல்லது அரசின் பொறுப்பில் காணப்படும் பணம், பொருட்கள், உபகரணங்கள் மற்றும் ஏனைய சொத்துக்கள் பாதுகாப்பாக வைத்திருத்தல் மற்றும் பாதுகாப்பதற்காக போதியள வானதும் மற்றும் முறையான ஏற்பாடுகள் மேற்கொள்வதாகவும் அவற்றை இடையிடையே மெய்மையாய்தல் செய்யப்படு வதாகவும், அவற்றை உரிய முறையில் தீர்த்தல் நடவடிக்கை மேற்கொள்ளும் போது அவ்வாறு தீர்த்தல் செய்வதற்கு உரிய பிரமாணங்களுக்கு மற்றும் அறிவுரைகளுக்கு இணங்க மேற்கொள்ளப்படும் எனவும்,- | 1. சொத்துக்களின் பாதுகாப்பு உறுதிப்படுத்தாமை<br>2. உரித்தாக்கப்படாத சொத்துக்கள் முறைசாரா விதமாக பயன்படுத்துதல்<br>3. நட்டங்கள் மற்றும் சேதங்கள் |
| 128(1)(ஏ) | நிலுவையாகவுள்ள கட்டணங்கள் ஆகியவற்றை அறவீடு செய்வதற்கு விஷேட ஏற்பாடுகள் மேற்கொள்வ தெனவும் அந்த கருமம் சாட்டப்பட்டிருந்த உத்தியோகத்தவர்களினால் நிலுவை பணம் தொடர்பாக அவற்றை அறவீடு செய்தவை விரைவு படுத்துவதற்காக எடுக்கப்பட்ட கட்டங்கள் தொடர்பாக குறைந்தளவு மூன்று மாதங்களுக்கு ஒரு முறை அல்லது வேறு முறையில் கட்டளையிட்டுள்ளவாறு தனக்கு அறிவிப்பதாகவும், | அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்கில் குறிப்பிட்டுள்ள குறைபாடுகள் |

| | | |
|---|---|---|
| 128(1)(ஐ) | அரசாங்க அலுவல்கள் நிறைவேற்றும் போது எதிர்பார்க்கும் சிக்கனம், வினைத்திறமை, முறைசார் விதமாக மற்றும் நேர்மைத் தன்மை ஆகிய விடயங்கள் தொடர்பாக போதிய கவனத்துடனும் தனது திணைக்களத்தின் அலுவல் கள் மேற்கொள்வதெனவும் | 1. வருடாந்த பாதீட்டு வரையறையை விஞ்சி கடப்பாடுகளுக்கு அணுகுதல்<br>2. முகாமைத்துவ குறைபாடுகள் |

## 2. பொருண்மையான மற்றும் முக்கியத்துவமானதுமான கணக்காய்வு அவதானிப்புக்கள்

---

### 2.1 செயலாற்றுகை

---

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 2014 பெப்ரவரி 17 ஆந் திகதிய 01/2014 ஆம் இலக்க அரச நிதிச் சுற்றறிக்கையின் பிரகாரம் 2017 ஆண்டிற்காக தயாரிக்கப்பட்டிருந்த செயல் நடவடிக்கைத் திட்டத்திற்கு குறிப்பிட்ட ஆண்டிற்காக நாளது வரை ஆக்கப்பட்ட நிறுவனத்தின் அமைப்பு கட்டமைப்பு, அங்கீகரிப்பட்ட பதவியணி மற்றும் தற்போது இருக்கும் பதவியணி தொடர்பாக விபரங்கள் உட்படுத்தப்பட்டிருக்கவில்லை.

**(ஆ) காலி நீதிமன்ற கட்டிடத் தொகுதி நிர்மாணித்தல்**

---

ரூபா 1,032 மில்லியனிற்கான மதிப்பீடு ஒன்றிற்காக இந்த செயற்திட்டத்தின் நிர்மாணவேலைகள் அரச பொறியியல் கூட்டுத்தாபனத்திற்கு 2013 திசெம்பர் 20 வழங்கப்பட்டிருந்தது. உடன்படிக்கையின் பிரகாரம் 2013 ஆரம்பிக்கப்பட்டு 2016 ஆண்டில் பூர்த்தி செய்யப்பட வேண்டிய இந்த செயற்திட்டத்தின் நிர்மாண வேலைகள் 2017 ஆண்டு வரை பூர்த்தி செய்திருக்கவில்லை. 2013 முதல் 2017 ஆண்டு வரையான 05 வருடங்களுக்காக ரூபா 672 மில்லியன் ஏற்பாடுகள் ஒதுக்கப்பட்டிருந்தது. அவற்றில் ரூபா 375 மில்லியனிற்கான செலவு ஒன்று மேற்கொள்ளப்பட்டிருந்ததுடன் ரூபா 297 மில்லியன் தொகை பயன்படுத்தியிருக்கவில்லை. 2017 ஆண்டின் பௌதீக முன்னேற்றம் 47 சதவீதமாகும்.

செயற்திட்டத்தின் ஆரம்பத்தில் சாத்தியக்கூறு ஆய்வு மேற்கொள்ளப்படாமையினால் தரையின் அளவு போதியளவாகக் காணப்படாமை, உட்கட்டமைப்பு வசதிகள் போதியளவு இன்மை மற்றும் தேவையை இனங்கண்டு பெறுகை நடவடிக்கை ஆரம்பிக்கப்படாமை ஆகிய விடயங்களின் காரணமாக நிர்மாணவேலைகள் இடை நிறுத்தப்பட்டிருந்தன. இந்த நீதிமன்ற கட்டிடத்தொகுதி வேறு இடமொன்றில் நிர்மாணிப்பதற்காக 2016 ஜூன் 07 திகதி அமைச்சரவை அங்கீகாரம் வழங்கப்பட்டிருந்தது.

**(இ) நொச்சியாகம சுற்றுலா நீதிவான் நீதிமன்ற மண்டபத்தின் எல்லை மதில் மற்றும் எல்லைவேலி நிர்மாணித்தல்**

---

இந்த செயற்திட்டத்தின் நிர்மாண வேலை அலுவல்கள் ரூபா 21.5 மில்லியனுக்காக மதிப்பீடு செய்திருந்ததுடன், அது தனியார் நிறுவனம் ஒன்றிற்கு ரூபா 15 மில்லியனுக்கு வழங்கப்பட்டிருந்தது. ஒப்பந்தக்காரர் மற்றும் நீதி மற்றும் சிறைச்சாலைகள் மறுசீரமைப்பு அமைச்சின் செயலாளருக்கிடையே 2012 ஜூன் 14 திகதிய உடன்படிக்கையின் பிரகாரம் 371 நாட்களில் அதாவது, 2013 ஜூலை 02 திகதி அலுவல்கள் பூர்த்தி செய்யப்பட வேண்டியிருந்தது. சாத்தியக்கூறு ஆய்வு மேற்கொள்ளப்படாமை, தரையில் பொருத்தல் தொடர்பாக சான்றிதழ் பெற்றுக்கொள்ளாமை ஆகிய விடயங்கள் காரணமாக செயற்திட்டத்தின் நிர்மாண வேலைகள் இடைநிறுத்தப்பட்டிருந்தது. செயற்திட்டத்தில் மீதியான வேலைகளை பூர்த்தி செய்வதற்காக 2017 ஆண்டின் போது ரூபா 24.5 மில்லியன் மதிப்பீடு செய்து ரூபா 4.9 மில்லியன் ஏற்பாடுகள் வழங்கப்பட்டிருந்த போதிலும் 2017 ஆண்டு இறுதி வரை நிர்மாணவேலைகள் ஆரம்பிக்கப்பட்டிருக்கவில்லை.

**(ஈ) கலவாஞ்சிக்குடி நீதிமன்றத்தில் புதிய சுவடிக்கூடம் மற்றும் வழக்குப் பண்ட அறைக் கட்டிடம் நிர்மாணித்தல்**

---

2014 திசெம்பர் 22 திகதி ஆரம்பிக்கப்பட்ட மேற்கூறிய ஒப்பந்தவேலையில் ஒப்பந்தவேலை காலம் 280 நாட்களாகக் காணப்பட்டது. அதன் பிரகாரம் வேலை பூர்த்தி செய்யப்பட வேண்டிய திகதி 2015 செப்தெம்பர் 28 திகதி எனினும் 2017 ஜூலை 07 திகதி வரை காலநீடிப்பு வழங்கப்பட்டிருந்தது. 280 நாட்களுக்குள் வேலை பூர்த்தி செய்வதற்கு திட்டமிடப்பட்டிருந்த இந்த செயற்திட்டம் பூர்த்தி செய்வதற்காக இரண்டு வருடங்களை அண்மித்த காலம் கடந்திருந்தது. இதன் காரணமாக குறிப்பிட்ட நீதிமன்றத்தின் அலுவல்களை இலகுவாக்குவதற்காக புதிய கட்டிடம் நிர்மாணிப்பதன் மூலம் எதிர்பார்க்கப்பட்ட

குறிக்கோள்களை அதே பிரகாரம் நிறைவேற்றப்பட்டன என அவதானிக்கப்படவில்லை.

**(உ) வத்தளை நீதிமன்றத் தொடர் கட்டிடம் நிர்மாணித்தல் - கட்டம் I**

---

2013 மார்ச் 01 திகதி வேலை ஆரம்பிக்கப்பட்டு 365 நாட்களில் வேலைபூர்த்தி செய்யும் இலக்குகளை வைத்து மேற்கூறிய செயற்திட்டத்தின் மொத்தக் கிரய மதிப்பீடு ரூபா 194.11 மில்லியன் தொகையாக காணப்பட்டதுடன் அந்த ஒப்பந்தவேலை அரச பொறியியல் கூட்டுத்தாபனத்திற்கு 2013 மார்ச் 01 ஒப்படைத்திருந்தது. இது தொடர்பாக பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(i) இந்த நிர்மாண வேலைக்காக 07 சந்தர்ப்பங்களில் காலநீடிப்பு வழங்கப்பட்டிருந்ததுடன் இறுதியான கால நீடிப்பின் பிரகாரம் பூர்த்தி செய்யவேண்டிய திகதி 2017 ஆகஸ்ட் 31 திகதியாகும். கணக்காய்வு திகதியாகிய 2017 நவம்பர் 11 திகதி வரை இந்த செயற்திட்டம் பூர்த்தியடைந்திருக்கவில்லை. அவ்வாறு வேலை பூர்த்தி செய்யப்படாமைக்கு 2015 மற்றும் 2016 ஆண்டுகளின் போது பௌதீக முன்னேற்றம் பலவீன மட்டத்தில் காணப்பட்டதுடன் காரணமாகியிருந்தது.

(ii) நிர்மாணவேலை, பொறியியல் சேவை, வீடமைப்பு மற்றும் பொது வசதிகள் அமைச்சின் நிலையான தொழிநுட்ப மதிப்பாய்வு குழுவினால் மதிப்பீட்டின் கூறுவிலைகள் அங்கீகரிப்பதன் அடிப்படையில், ரூபா 194.11 மில்லியன் மொத்தக் கிரய மதிப்பீட்டின் மீது ஒப்பந்தவேலை அரச பொறியியல் கூட்டுத்தாபனத்திற்கு வழங்குவதற்கு அமைச்சரவையின் அங்கீகாரம் கிடைத்திருந்தது. அதன் பிரகாரம் நிலையான தொழிநுட்ப மதிப்பாய்வுக் குழு அங்கீகரித்த மதிப்பீடு ரூபா 156.19 மில்லியன் தொகையாகும். எனினும் கணக்காய்வு திகதியாகிய 2017 நவம்பர் 14 திகதி அளவில் செயற்திட்டத்திற்காக செலவிடப்பட்ட மொத்தச் செலவு ரூபா 212.78 மில்லியன் தொகையாக காணப்பட்டதால் மதிப்பீட்டை விஞ்சி ரூபா 56.61 மில்லியன் செலவிடப்பட்டிருந்தது என அவதானிக்கப்பட்டது.

(iii) அதே போல் செலவிடப்பட்ட பணத்தில் வத்தளை நீதிமன்ற நிர்மாணித்தல் கட்டம் - II தொடர்பாக அரச பொறியியல் கூட்டுத்தாபனத்திற்கு செலுத்தப்பட்ட ரூபா 36.60 மில்லியனிற்கான செலவு ஒன்றும் அடங்கியிருந்ததென கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டது.

மேலும், வத்தளை நீதிமன்ற நிர்மாணவேலை கட்டம் - II இற்கான மீளாய்வாண்டின் போது பாதீட்டு மதிப்பீட்டு ஏற்பாடுகள் ஒதுக்கியிருக்கவில்லை.

(iv) உசாத்துணை சேவை கட்டணம் ஒப்பந்த பெறுமதியில் 04 சதவீதம் அதாவது ரூபா 5.18 மில்லியன் என நிலையான தொழிநுட்ப மதிப்பாய்வுக் குழு அங்கீகரித்திருந்தது. அவ்வாறாயினும், 2014 ஆண்டின் போது மாத்திரம் ரூபா 7.26 மில்லியன் தொகை அரச பொறியியல் கூட்டுத்தாபனத்திற்கு செலுத்தப்பட்டிருந்தது. அவ்வாறாயினும், 2014 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு இந்த நிர்மாண வேலைகளின் பௌதீக முன்னேற்றம் 70 சதவீதம் மாத்திரமே ஆகும்.

(v) நிர்மாணவேலை I ஆவது கட்டத்தில் மேற்கொள்ளப்பட்ட சாத்தியக்கூறு ஆய்வின் பலவீனத் தன்மை காரணத்தினால் கட்டம் I இல் மேற்கொள்ளப்பட வேண்டிய தேவையாகிய நீர் முறைமை மற்றும் தீ அணைக்கும் பாதுகாப்பு முறைமை தயாரித்தல், நீதிபதிகளின் இரண்டு ஆசனங்கள் தயாரித்தல், பொது மக்கள் கழிவறை முறைமை நிர்மாணித்தல், மின்பிறப்பாக்கி பொறுத்துதல், கதவுகள் யன்னல்கள் பொருத்துதல் மற்றும் காவல் அறை நிர்மாணித்தல் கட்டம் II இல் மேற்கொள்வதற்கு திட்டமிடப்பட்டிருந்தது. அதற்கான மதிப்பீடு ரூபா 148.29 தொகை ஆக இருந்தது. 2016 நவம்பர் 29 திகதிய அமைச்சரவை அங்கீகாரத்தின் பிரகாரம் இந்த செயற்திட்டமும், அரச பொறியியல் கூட்டுத்தாபனத்திற்கு 2016 திசெம்பர் 24 திகதி முதல் வழங்கப்பட்டிருந்தது. ஒப்பந்தவேலை உடன்படிக்கையின் பிரகாரம் 240 தினங்களில் அதாவது 2017 ஆகஸ்ட் 21 திகதி வேலை பூர்த்தி செய்யப்பட வேண்டுமெனினும் கணக்காய்வுத் திகதியாகிய 2017 நவம்பர் 30 திகதி வரை வேலை பூர்த்தி அடைந்திருக்கவில்லை.

(vi) நிர்மாண வேலை கட்டம் I இற்கான செயற்திட்டத்தின் ஒப்பந்தவேலை உடன்படிக்கையின் 8.7 பந்தியின் பிரகாரம் தாமதிக்கும் நாளொன்றிற்கு ஒப்பந்த தொகையில் 0.05 சதவீதம் என ரூபா 12,269,270 இற்கான தாமதக் கட்டணம் 04 சந்தர்ப்பங்களில் அறவிடப்பட்டிருந்தது. எனினும் ஒப்பந்தக்காரர் நிருவாகத்திற்கு வெளியே அல்லாத விடயங்களுக்காக முறையான மேற்பார்வை ஒன்று இன்றி காலநீடிப்பு வழங்கப்பட்டுள்ளதால் அறவிடப்பட்ட தாமதக் கட்டணம் மீண்டும் திருப்பிச் செலுத்துவதற்கு

நேரிட்டிருந்தது. அந்த சந்தர்ப்பத்தில் ஏற்பட்டிருந்த பெறுமதி கூட்டிய வரி திருத்தத்தின் காரணமாக அந்த திருத்திய பெறுமதி கூட்டிய வரி உட்பட ரூபா 12,528,663 தொகை திருப்பி செலுத்தியிருந்தமையால் ரூபா 259,393 தொகை மிகையாக செலுத்தப்பட்டிருந்தது.

**(உள) ஹெல்பொட சுற்றுலா நீதிவான் நீதிமன்றத்தின் மற்றும் கம்பளை மாவட்ட/ நீதிவான் நீதிமன்றத்தின் பொது மக்கள் கழிவறை நிர்மாணித்தல் மற்றும் கம்பளை மாவட்ட நீதிவான் உத்தியோகபூர்வ இல்லத்திற்கான காவல் அறை ஒன்று நிர்மாணித்தல்**

---

(i) பிரதான மூன்று பகுதிகளை கொண்ட மேற்கூறிய நிர்மாண வேலைகள் தொடர்பாக அமைச்சின் மதிப்பீடு ரூபா 2,718,740 தொகை (பெறுமதி கூட்டிய வரி இன்றி) ஆக இருந்ததுடன் அதற்காக 09 நிறுவனங்களில் இருந்து வரையறுக்கப்பட்ட கூறுவிலை அழைக்கப்பட்டிருந்தது. கூறுவிலைகள் சமர்ப்பித்திருந்த ஒரே நிறுவனமாகிய நிறுவனத்திற்கு ரூபா 2,501,796 (பெறுமதி கூட்டிய வரி இன்றி) தொகைக்கு இந்த ஒப்பந்த வேலையை சாட்டுவதற்காக அமைச்சின் சிறு பெறுகை குழுவின் அங்கீகாரம் கிடைத்திருந்தது. 2014 திசெம்பர் 12 திகதி முதல் வேலை ஆரம்பிக்கப்பட்டு 105 நாட்களுக்குள் வேலை பூர்த்தி செய்யப்பட வேண்டுமென்ற இலக்கில் ஒப்பந்தவேலை வழங்கப்பட்டிருந்ததுடன், வேலை பூர்த்தி செய்யப்பட வேண்டிய திகதி 2015 மார்ச் 27 ஆம் திகதியாகும்.

எனினும் ஒப்பந்தக்காரரின் கோரிக்கையை கவனத்தில் எடுத்து 2015 அக்தோபர் 20 திகதி வரை இரண்டு சந்தர்ப்பங்களில் காலநீடிப்பு வழங்கப்பட்டிருந்தது. அவ்வாறு ஒப்பந்தக்காரருக்கு காலநீடிப்பு வழங்கியிருந்த போதிலும் வேலை பூர்த்தி செய்திருக்காமையால் 2016 ஏப்ரல் 25 திகதி கூடிய சிறு அளவிளதான பெறுகை குழு ஒப்பந்த வேலையின் அலுவல்களை நிறுத்துவதற்கு தீர்மானித்திருந்தது. அச்சந்தர்ப்பத்தில் செயற்திட்டத்தில் மேற்கொள்ளப்பட்ட வேலைகளின் பெறுமதி ரூபா 1,184,749 தொகையாகும்.

(ii) ஆரம்ப ஒப்பந்த வேலையை பூர்த்தி செய்யும் நாள் அளவில், மூன்று பகுதிகளை கொண்ட இந்த செயற்திட்டத்தின் கம்பளை மாவட்ட நீதிவானின் உத்தியோகபூர்வ இல்லம், காவல் அறை ஒன்று நிர்மாணித்தல் வேலை மாத்திரம் பூர்த்தி செய்யப்பட்டிருந்ததுடன்,

ஹெல்பொட சுற்றுலா நீதிவான் நீதிமன்றில் பொது மக்கள் கழிவறை நிர்மாணிக்கும் வேலையின் மீதியான வேலையின் ரூபா 603,563 அதாவது மொத்த மதிப்பீட்டில் 70 சதவீதமும், கம்பளை மாவட்ட/ நீதிவான் நீதிமன்றில் பொதுமக்கள் கழிவறை நிர்மாணிக்கும் வேலையின் மீதியான வேலை ரூபா 534,097 தொகை அதாவது மொத்த மதிப்பீட்டில் 62 சதவீதமாகும்.

(iii) ஆரம்ப செயற்திட்டத்தில் மேலும் பூர்த்தி செய்யப்படாமல் காணப்பட்ட மீதி வேலைப் பகுதியாகிய ஹெல்பொட சுற்றுலா நீதிவான் நீதிமன்றத்தில் பொது மக்கள் கழிவறை நிர்மாணிக்கும் வேலைக்காக 2017 ஆகஸ்ட் 21 திகதிய 2441 ஆம் இலக்க அனுமதிப்பத்திரத்தின் மூலம் KAN-1-1-7-2104 (Small Scale Development Programme) செலவு விடயத்தின் கீழ் ரூபா 923,000 இற்கான ஏற்பாடுகள் வழங்கியிருந்த போதிலும் அதனது முன்னேற்றம் தொடர்பாக தகவல்கள் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்படவில்லை. மேலும் 2016 ஏப்ரல் 25 திகதி வேலை பூர்த்தி செய்யும் போது இந்த செயற்திட்டத்தின் மீதிவேலைகளின் பெறுமதி ரூபா 603,563 தொகையாக இருந்த போதிலும் 2017 புதிய மதிப்பீடு ரூபா 923,000 தொகை ஏற்பாடுகள் வழங்கியிருந்தது. அதன் பிரகாரம் ஒப்பந்த வேலை தாமதமடைந்த காரணத்தினால் ரூபா 319,437 தொகை மிகையாக ஏற்பாடுகள் வழங்கியிருந்தது.

(iv) மேலும் அரச உத்தியோகத்தர்கள் மற்றும் பொதுமக்கள் நிதமும் புழங்கும் இடம் ஒன்றான நீதிமன்றங்களின் கழிவறை வசதிகள் மிக முக்கியத்தேவை ஆக இருந்ததுடன் அத்தேவையினை பூர்த்தி செய்வதற்காக இவ்வாறு 03 வருடங்களை அண்மித்த காலம் கடந்துள்ளதால் நிர்மாணிப்பதன் மூலம் எதிர்பார்க்கப்பட்ட குறிக்கோள் நிறைவேற்றப்பட்டிருக்கவில்லை. 2016 ஏப்ரல் 25 திகதி வேலை நிறுத்தப்பட்டிருந்த இந்த செயற்திட்டம் தொடர்பாக உரிய உத்தியோகத்தர்களினால் சுமார் ஒரு வருட கால தாமத்தின் பின்னரே இடப் பரிசோனை மேற்கொள்ளப்பட்டிருந்தது.

**(எ) கலகெதர நீதிவான் நீதிமன்றம் நிர்மாணித்தல்**

-----------------------------------------------------------------------

தற்போது காணப்படும் சுற்றுலா நீதிவான் நீதிமன்ற கட்டிடத்தை உடைத்து அகற்றிவிட்டு அந்த காணியில் புதிய கட்டிடமொன்று நிர்மாணிப்பதற்காக திறந்த கூறுவிலை அழைக்கப்பட்டு இரண்டாவது குறைந்த விலையாகிய ரூபா 63,162,829 தொகைக்காக ஒப்பந்தவேலை வழங்கப்பட்டிருந்தது. இது தொடர்பாக பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) அமைச்சரவை விஞ்ஞாபத்தின் படி தற்போது காணப்படும் நீதிவான் நீதிமன்ற கட்டிடத்தினை உடைத்து அகற்றி புதுக் கட்டிடம் நிர்மாணிப்பதற்கு விதப்புரைக்கப்பட்டிருந்த போதிலும் அதனை அகற்றுவதற்கு முன்னர் புதிய கட்டிடம் நிர்மாணிப்பதற்காக ஒப்பந்தக்காரர் தெரிவு செய்யப்பட்டிருந்தது. 2014 திசெம்பர் 15 திகதி உடன்படிக்கை கைச்சாத்திட்ட பின்னர் வேலை ஆரம்பிப்பதற்காக முற்பணம் என ரூபா 12,523,566 தொகை (பெறுமதி கூட்டியவரி இன்றி) 2014 திசெம்பர் 31 திகதி ஒப்பந்தக்காரருக்கு செலுத்தப்பட்டிருந்தது. எனினும் நிர்மாண வேலைக்காக வேலைத்தளம் ஒப்படைக்கப்பட்டிருந்த 6½ மாதங்களுக்கு பின்னர் அதாவது 2015 ஜூலை 20 திகதியாகும்.

(ii) 2015 செப்தெம்பர் 11 திகதி பூர்த்தி செய்யப்பட்டிருந்த இந்த செயற்திட்டம் 1½ வருட கால தாமதத்துடன் 2017 மே 04 திகதி பூர்த்தி செய்து ஒப்படைத்திருந்ததுடன் இலங்கை பொறியியல் கூட்டுத்தாபனத்திற்கு ரூபா 3,383,794 தொகை உசாத்துணை கட்டணம் செலுத்தப்பட்டிருந்தது. அவ்வாறாயினும் கண்டி தொழிநுட்ப உத்தியோகத்தரின் 2017 மே 29 திகதிய கடிதத்தின் மூலம் நிர்மாணவேலை தொடர்பாக கணிசமான குறைபாடுகள் சுட்டிக் காட்டப்பட்டிருந்தன.

(iii) அமைச்சின் மற்றும் உசாத்துணை சேவை வழங்கிய நிறுவனத்தின் குறைபாடுகள் செயற்திட்டம் தாமதமடைவதற்கு அனேகமாக தாக்கங்களை ஏற்படுத்தியிருந்ததுடன், 08 ஆவது சிட்டைக் கொடுப்பனவு செய்யும் போது உடன்படிக்கையின் பிரகாரம் கழித்திருந்த ரூபா 3,631,863 இற்கான தாமதக் கட்டணம் 2017 ஜூன் 05 திகதி ஒப்பந்தக்காரருக்கு திருப்பி செலுத்தப்பட்டிருந்தது.

(iv) எவ்வாறாயினும் செயற்திட்டம் 1½ ஆண்டுகள் தாமதமாதல் மற்றும் நிர்மாண வேலைகளில் குறைபாடுகள் காணப்படல் ஆகிய

காரணங்களினால் புதிய நீதிமன்றம் ஒன்று நிர்மாணிக்கப்பட்டதன் மூலம் எதிர்பார்க்கப்பட்ட செயலாற்றலை நெருங்காமை மற்றும் அதன் காரணமாக நீதி மன்றத்தில் இருந்து சேவைகள் பெரும் தரப்பினருக்கு ஏற்பட்ருந்த வசதியீனங்களை குறைப்பதற்கு அமைச்சினால் போதியளவு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளன என கணக்காய்வின் போது அவதானிக்கப்படவில்லை.

**(ஏ) காலி சிவில் மேன்முறையீட்டு நீதிமன்றத்தில் பக்கச்சுவர் நிர்மாணித்தல்**

காலி சிவில் மேன்முறையீட்டு நீதிமன்றத்தின் பக்கச்சுவர் நிர்மாணிக்கும் செயற்திட்டத்தின் நிர்மாண வேலைகள் ரூபா 6.0 மில்லியன் தொகைக்கு வழங்கப்பட்டிருந்தது. 2015 ஜனவரி 30 திகதி அமைச்சுச் செயலாளர் மற்றும் ஒப்பந்தக்காரர் இடையே அணுகியிருந்த உடன்படிக்கையின் பிரகாரம் 2014 திசெம்பர் 24 திகதி முதல் 210 நாட்களில் அதாவது 2015 ஜுலை 22 திகதி பூர்த்தி செய்யப்பட வேண்டிக் காணப்பட்டது. நிலத்திற்கான சாத்தியக்கூறு சான்றிதழ் பெற்றுக்கொள்வதன் தாமதத்தின் காரணமாக காலி மா நகர சபையின் அங்கீகாரம் இன்றி நிர்மாணவேலை ஆரம்பிக்கப்பட்டிருந்தமையால் நிர்மாணவேலை இடைநிறுத்தும் படி அறிவித்தல் ஆகிய விடயங்களின் காரணமாக செயற்திட்டம் இடைநிறுத்தப்பட்டிருந்தது. அதற்குப் பதிலாக நீதிமன்ற பாதுகாப்பிற்காக கம்பி வேலி ஒன்று நிர்மாணித்தல் மற்றும் பாதுகாப்பு கமரா முறைமை ஒன்று பொருத்துவதற்கு நடவடிக்கை எடுத்திருந்ததுடன் இந்த மேற்கூறிய செயற்திட்டத்திற்காக செலுத்தியிருந்த ரூபா 2,722,838 இற்கான தொகை சிக்கனமற்ற கொடுக்கல் வாங்கல் என அவதானிக்கப்பட்டது.

## 2.2 பெறுகை செயன்முறை

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) அரச பெறுகை வழிகாட்டல் கோவையின் வழிகாட்டல் 4.3.2 இன் பிரகாரம் ரூபா 100 மில்லியனை மிகைக்காத பெறுகைகளுக்காக மொத்தக் கிரய மதிப்பீடு திணைக்களத் தலைவரினால் அங்கீகரிக்கப்பட வேண்டுமெனினும் கம்பளை மாவட்ட/ நீதிவான் நீதிமன்றத்தில் பொதுமக்கள் கழிவறை நிர்மாணிக்கும் நிர்மாண வேலையின் மீதியான வேலைக்காக தயாரிக்கப்பட்டிருந்த ரூபா 528,000 தொகைக்கான புதிய கிரய மதிப்பீடு திணைக்களத் திலைவரினால் அங்கீகரிக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) அரச பெறுகை வழிகாட்டல் கோவையின் வழிகாட்டல் 7.4.1 இன் படி தேவையான முறையான அங்கீகாரம் பெற்றுக்கொள்வதற்காக போதியளவு கால அவகாசம் பெறக்கூடிய வகையில் விலைமனு மதிப்பாய்தல் கூடியளவு விரைவாக செய்யப்பட வேண்டுமெனினும் கலகெதர நீதிவான் நீதிமன்றம் நிர்மாணிக்கும் ஒப்பந்தவேலையின் விலைமனு திறத்தல் 2014 ஆகஸ்ட் 18 திகதி மேற்கொள்ளப்பட்டிருந்ததுடன் விலைமனுக்கான மதிப்பாய்வு செய்து தொழில்நுட்ப மதிப்பாய்வு அறிக்கை சமர்ப்பிப்பதற்காக சுமார் 03 மாதகாலம் (2014 நவம்பர் 11) கழிந்திருந்தது.

(இ) அரச பெறுகை வழிகாட்டல் கோவையின் வழிகாட்டல் 8.9.1 இன் பிரகாரம் விலைமனு தாரர் ஒருவரினால் சமர்ப்பிக்கப்பட்டுள்ள விலைமனுக்கான ஏற்கை செய்த பின்னர் குறிப்பிட்ட விலைமனுதாரருக்கு உடனடியாக முறையான ஏற்கை கடிதம் ஒன்று வழங்கப்பட வேண்டியிருந்ததுடன், அத்துடன் முறையான ஒப்பந்த உடன்படிக்கை எழுதி கையொப்பமிடுதலும் மேற்கொள்ளப்பட வேண்டுமெனினும், ஹெல்பொட சுற்றுலா நீதிவான் நீதிமன்றில் மற்றும் கம்பளை மாவட்ட/ நீதிவான் நீதிமன்றில் பொது மக்களின் கழிவறை நிர்மாணித்தல் மற்றும் கம்பளை மாவட்ட நீதிவான் உத்தியோகபூர்வ வாசஸ்தலம் மற்றும் காவல் அறை ஒன்று நிர்மாணிக்கும் ஒப்பந்தவேலையுடன் தொடர்பாக உரிய ஏற்கை கடிதம் 2014 திசெம்பர் 05 ஆம் திகதி விலைமனுதாரருக்கு அனுப்பப்பட்டிருந்த போதிலும் உடன்படிக்கை மேற்கொள்ளப்பட்டிருந்தது 2015 ஜனவரி 30 திகதியாகும்.

(ஈ) அரச பெறுகை வழிகாட்டல் கோவையின் பிரிவு 8.9.3 இன் பிரகாரம் உசாத்துணை சேவை (Consultancy Service) வழங்குவதற்காக உசாத்துணை நிறுவனத்துடன் உடன்படிக்கை ஒன்று மேற்கொள்ளப்பட வேண்டுமெனினும் வத்தளை நீதிமன்ற கட்டிடத்தொகுதி நிர்மாணிக்கும் செயற்திட்டத்தின் உசாத்துணை சேவை வழங்களுக்காக உசாத்துணை சேவை நிறுவனம் மற்றும் நீதி அமைச்சு இடையே எழுத்துமூல உடன்படிக்கை ஒன்று மேற்கொண்டிருக்கவில்லை.

(உ) அரச பெறுகை வழகாட்டல் கோவியன் பிரிவு 8.9.3(ஆ) இன் பிரகாரம் இலங்கை ரூபா 500,000 தொகையினை மிகைக்கும் பண்டங்கள் மற்றும் சேவைகளுக்காக முறையான ஒப்பந்தவேலைகளுக்கான அதிகாரிகளினால் கையொப்பமிடப்பட்ட வேண்டும் எனினும் திறந்த நீதிமன்றங்களின் சட்டவரைஞரினது பயன்பாட்டிற்காக 800 கதிரைகள் கொள்வனவு செய்வதற்கான

ரூபா 3,940,176 (VAT இன்றி) ஒப்பந்த வேலைக்காக முறையான உடன்படிக்கை ஒன்று மேற்கொண்டிருக்கவில்லை.

(ஊ) அரச பெறுகை வழிகாட்டல் கோவையின் பிரிவு 8.12.2 இன் பிரகாரம் விவரக் குறிப்புக்கள் மற்றும் இணங்கியிருந்த ஏனைய குறித்தொதுக்கியவைகள் மற்றும் நிபந்தனைகளுக்கு இணங்க வேலைகள் பூர்த்தி செய்யப்பட்டுள்ளன என மற்றும் சான்றுபடுத்தியுள்ளன என கொடுப்பனவு ஒப்பந்தவேலையின் நிபந்தனைகளுக்கு இணங்கியுள்ளது எனவும் சான்றுபடுத்தி வேலைபூர்த்தி செய்தல் சான்றிதழ் ஒன்று பொறியியலாளர்/ உசாத்துணையாளரினால் வழங்கப்பட வேண்டுமெனினும் களவஞ்சிக்குடி நீதிமன்றத்தில் புதிய சுவடிக்கட்டிடம் மற்றும் வழக்குப் பண்ட அறை கட்டிடம் நிர்மாணிக்கும் செயற்திட்டத்தின் வேலைகள் பூர்த்தி செய்யப்பட்டன என சான்றிதழ் ஒன்று வழங்கியிருக்காததுடன் கம்பளை மாவட்ட/ நீதிவான் நீதிமன்ற பொதுமக்கள் கழிவறை நிர்மாணித்தலின் இரண்டாம் ஒப்பந்தவேலையின் வேலைகள் பூர்த்தி செய்யப்பட்டதற்கான சான்றிதழ் ஒன்று வழங்கியிருக்கவில்லை.

(எ) அரச பெறுகை வழிகாட்டல் கோவையின் பிரிவு 8.13.4 இன் படி சமர்ப்பித்திருந்த கூறுவிலைகளில் 05 சதவீத விலை தளம்பல்கள் மற்றும் 10 சதவீத உறுதியற்ற செலவுகளுக்காக ஏற்பாடுக் மேற்கொள்ள வேண்டியதுடன் கலகெதர நீதிவான் நீதிமன்ற நிர்மாணவேலை ஒப்பந்தவேலையின் தொழில்நுட்ப மதிப்பாய்வுக் குழு அறிக்கையின் அனைத்து கூறுவிலைகளும் உறுதியற்ற செலவுகளுடன் மற்றும் வரி இன்றி சமர்ப்பித்துள்ளதாக குறிப்பிட்டிருந்த போதிலும் கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டதாவது இந்த விலை வரிஇன்றியது போலவே உறுதியற்ற செலவுகள் இன்றிய விலையாகும். இதன் பிரகாரம் குறிப்பிட்ட வழங்கல் வழங்கியிருந்த விலையாகிய ரூபா 63,162,829 தொகையும் உறுதியற்ற விலையுடனான விலை என தீர்மானிக்கப்பட்டிருந்த தொழிநுட்ப மதிப்பாய்வுக் குழு மற்றும் பெறுகை குழு தீர்மானம் சரியானது அல்ல என அவதானிக்கப்பட்டது.

(ஏ) அரச பெறுகை வழிகாட்டல் கோவையின் பிரிவு 8.14.1 இன் பிரகாரம் தாமதம் ஏற்பட்டது ஒப்பந்தக்காரரின் கட்டுப்பாட்டுக்கு வெளியே சந்தர்ப்பங்களின் காரணங்கள் என பெறுகை நிறுவனம் திருப்திப்படக்கூடிய விதமாக உறுதிப்படுத்தப்படும் போது விஷேட சந்தர்ப்பங்களுக்கான காரணங்களின் போது அல்லது இயற்கை பேரழிவு ஒன்றின் போது அதிகாரமுடைய ஆள்ஒருவரினால் கால நீடிப்பு வழங்க முடியும். அவ்வாறாயினும், வத்தளை

நீதிமன்ற கட்டிடத்தொகுதி நிர்மாணித்தல், களவஞ்சிக்குடி நீதிமன்றத்தில் புதிய சுவடிக்கூடம் மற்றும் வழக்கு பொருட்கள் வைக்கும் அறை கட்டிடம் நிர்மாணித்தல், ஹெல்பொட சுற்றுலா நீதிவான் நீதிமன்றத்தில் மற்றும் கம்பளை மாவட்ட நீதிவான் உத்தியோகபூர்வ இல்லத்திற்கு காவல் அறை ஒன்று நிர்மாணிக்கும் ஒப்பந்த வேலைகளின் போது அதன் பிரகாரம் செயற்பட்டிருக்கவில்லை என கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டது.

## 2.3 சொத்துக்கள் முகாமைத்துவம்

திணைக்களத்தின் சொத்துக்கள் தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட தெரிவுக் கணக்காய்வு பரிசோதனையின் போது பின்வரும் குறைபாடுகள் அவதானிக்கப்பட்டன.

(அ) 33 நீதிமன்ற வலயங்களை சேர்ந்த 221 நீதிமன்றங்கள் தொடர்பாக சமர்ப்பித்திருந்த தகவல்களின் பிரகாரம் காணியின் உரிமையை குறிப்பிட்டிருந்த நீதிமன்றங்களின் எண்ணிக்கை 132 மாத்திரமே.

(ஆ) காணியின் பெயர் குறிப்பிட முடியாத நீதிமன்றங்களின் எண்ணிக்கை 162 காணப்பட்டதுடன், காணியின் அளவுகளை குறிப்பிட்டுள்ள நீதிமன்றங்களின் எண்ணிக்கை 147 தொகை மாத்திமே ஆகும். 19 நீதிமன்றங்களுக்காக மாத்திரம் காணி தொடர்பாக சாட்டுதல் சான்றிதழ் பெற்றிருந்ததுடன் 24 நீதிமன்றங்கள் மாத்திரம் காணிகளின் பெறுமதி மதிப்பீட்டு பெறுமதி கணிக்கப்பட்டுள்ளது. அதன் பிரகாரம் காணிகள் தொடர்பாக சரியான பெறுமதியினை கணக்கீடு செய்வதற்கு அமைச்சு இது வரை நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

(இ) 2016 மார்ச் 31 திகதிய 05/2016 ஆம் இலக்க அரச நிதி சுற்றறிக்கையின் பிரகாரம் 2017 வருடாந்த பண்டக் கணிப்பீடு மேற்கொள்ளப்பட்டு அதன் அறிக்கை சுற்றறிக்கையின் 3.2.6 பந்தியின் பிரகாரம் 2018 ஜூன் 15 திகதிக்கு முன்னர் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பிக்கப்பட வேண்டுமெனினும் 2018 செப்தெம்பர் 18 திகதி அளவிலும் பண்டக் கணிப்பீட்டு அறிக்கை கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பித்திருக்கவில்லை.

(ஈ) மாத்தறை நகர அபிவிருத்தி திட்டத்தின் கீழ் புதிய வைத்தியசாலை தொடர் கட்டிடத்திற்காக உரித்தாக்கிய மீதி பகுதியின் அபிவிருத்தி செயற்திட்டத்திற்காக சாட்டுவதற்காக எடுக்கப்பட்ட தீர்மானத்தின் பிரகாரம் நீதி அமைச்சுக்கு 4.263 ஹெக்டயர்கள் அளவு காணி மாத்தறை நீதிமன்ற தொடர் கட்டிடம்

நிர்மாணிப்பதற்காக ஒதுக்கப்பட்டு அமைச்சினால் அனுபவித்தல் மாத்திரம் பெற்றிருந்த போதிலும் இந்த காணி அமைச்சுக்கு முறைசார் விதமாக உரித்தாக்கப்பட்டிருக்கவில்லை.

## 2.4 நட்டங்கள் மற்றும் சேதங்கள்

---------------------------------------------------

தெரிவுக் கணக்காய்வு பரிசோதனையின் போது கண்டறியப்பட்ட நட்டங்கள் மற்றும் சேதங்கள் தொடர்பாக அவதானிப்பு கீழே காண்பிக்கப்படுகின்றது.

நொச்சியாகம சுற்றுலா நீதிவான் நீதிமன்றத்தில் நிர்மாணிக்கும் ஒப்பந்த வேலை கைவிட்டுச் சென்றதாக கணித்து 2013 நவம்பர் 20 திகதி ஒப்பந்தக்காரருக்கு அறிவிக்கப்பட்டிருந்தது. ஒப்பந்த வேலைக்காக பெற்றிருந்த ரூபா 1,503,056 இற்கான செயலாற்றுகை பிணை முறிக்கான பணத்தை அறவீடு செய்வதற்காக இது வரை நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. அதே போல் வேலை ஆரம்பிப்பதற்கான முற்பணம் என வழங்கியிருந்த ரூபா 2,114,829 இற்கான முற்பணத்தொகையினை அறவீடு செய்வதற்காக நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

## 2.5 முகாமைத்துவ பலவீனங்கள்

------------------------------------------------

தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனைகளின் போது பின்வரும் பலவீனங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) அத்தியவசிய அலுவல்களுக்காக மதிப்பீடு தயாரித்து பெற்றிருந்த ஏற்பாடுகளை குறிப்பிட்ட கருமத்திற்காகப் பயன்படுத்த வேண்டியிருந்த போதிலும், மாரவில மாவட்ட/ நீதிவான் நீதிமன்றத்தின் அத்தியவசிய திருத்த அலுவல்களுக்காக கட்டிடங்கள் திணைக்களத்தின் மூலம் ரூபா 5,134,000 இற்கான மதிப்பீடு ஒன்று தயாரித்திருந்த போதிலும் MJ/ENG/ALLO/Chilow/2016 மற்றும் ஆகஸ்ட் 30 ஆம் திகதிய நீதி அமைச்சின் சிரேஷ்ட உதவி செயலாளரின் கடிதத்தின் மூலம் மதிப்பீட்டின் விடய இலக்கம் 01 மற்றும் 02 இற்கான மாத்திரம் ரூபா 80,000 இற்கான ஏற்பாட்டுத் தொகை ஒன்றினை தடுத்து வைப்பதற்காக அங்கீகரித்து மீதியாகவுள்ள ரூபா 5,054,000 இற்கான ஏற்பாடுகளை மீண்டும் திருப்பி உரித்தாக்கியிருந்தது.

(ஆ) மாத்தறை நீதிமன்ற கட்டிடத்தொகுதி நிர்மாணிப்பதற்காக ரூபா 1,119.5 மில்லியன் மதிப்பிட்டிருந்தது. 2016 மார்ச் 09 திகதி கிடைத்திருந்த அமைச்சரவை அங்கீகாரத்தின் மீது 2016 மே மாதம் முதல் 2019 மே இல் பூர்த்தி செய்யப்பட வேண்டியிருந்த இந்த நிர்மாண வேலைகளுக்காக மத்திய

உசாத்துணை பணியகத்தின் சென்டரல் இன்ஜினியரின் சர்விஸஸ் தனியார் நிறுவனத்திற்கு சாட்டப்பட்டிருந்ததுடன் அரச பெறுகை வழிகாட்டல் கோவையின் வழிகாட்டல் 8.9.1(ஆ) இன் பிரகாரம் முறையான ஒப்பந்தவேலை உடன்படிக்கையொன்று எழுதிக் கையொப்பமிடப்பட வேண்டுமெனினும் முறையான உடன்படிக்கை ஒன்று இன்றி வேலை ஆரம்பிப்பதற்கான முற்பணம் என 2016 ஆண்டின் போது 02 சந்தர்ப்பங்களில் ரூபா 154,926,000 (பெறுமதி கூட்டிய வரி உடன்) பணியகத்திற்கு செலுத்தப்பட்டிருந்தது.

(இ) மாத்தறை நீதிமன்ற கட்டிடத்தொகுதியில் நிர்மாணிப்பதற்காக வேலை ஆரம்பிப்பதற்கான முற்பணம் என ரூபா 184,926,000 தொகையும் செய்த வேலைகளுக்காக 09 சிட்டைகளுக்கான ரூபா 234,094,271 தொகையும் ஆக ரூபா 419,023,270 (பெறுமதி கூட்டிய வரி உடன்) மொத்தக் கிரயம் மதிப்பீட்டு கிரயத்தில் 38 சதவீதம், உசாத்துணை நிறுவனத்திற்கு மற்றும் ஒப்பந்தக்காரருக்குச் செலுத்தியிருந்த போதிலும் 2017 அக்தோபர் மாதம் வரை அமைச்சரவை அங்கீகாரத்தின் பிரகாரம் மதிப்பீடுக்காக வீடமைப்பு மற்றும் நிர்மாணத்துறை அமைச்சின் நிலையான தொழிநுட்ப குழுவின் அங்கீகாரத்தை பெற்றிருக்கவில்லை.

(ஈ) பாணந்துறை நீதிவான் நீதிமன்றத்திற்குச் சொந்தமான மீளாய்வாண்டு இறுதியளவில் 06 மாத காலம் கடந்துள்ள ரூபா 4,259,627 தொகை பெறுமதியான 51 காசோலைகள் காணப்பட்டன. இது தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனையின் போது 2016 ஆண்டின் போது 02 அரச நிறுவனங்களின் பெயர் குறிப்பிட்டுள்ள கூட்டுத்தொகை ரூபா 3,630,076 தொகைக்கான 02 காசோலைகள் மற்றும் 2017 மார்ச் 30 அரச நிறுவனம் ஒன்றின் பெயர் குறிப்பிடப்பட்ட ரூபா 185,000 இற்கான காசோலை ஒன்று 2018 ஜூன் 20 திகதி அளவிலும் குறிப்பிட்ட கொடுப்பனவுகளை பெற்றுக்கொள்ளக் கூடிய ஒப்படைக்காமல் கையில் தடுத்து வைக்கப்பட்டிருந்தது. அவற்றில் ரூபா 1,850,000 தொகை காசோலைக்காக காசோலைகளில் கையொப்பமிடுவதற்காக அதிகாரம் அளிக்கப்படாத உத்தியோகத்தர்களினால் கையொப்பமிடப்பட்டிருந்தன என அவதானிக்கப்பட்டது.

## 2.6 பணிகளை நிறைவேற்றுவதற்காக பாராளுமன்றத்தினால் வழங்கியிருந்த ஏற்பாடுகளை பயன்படுத்துதல்

---

2017 திசெம்பர் 31 திகதியில் முடிவடைந்த ஆண்டு முன்னைய ஐந்து வருட காலப்பகுதியில் திணைக்களத்திற்கு வழங்கப்பட்டிருந்த ஏற்பாடுகள், பயன்படுத்தல்

மற்றும் சேமிப்பு தொடர்பான தகவல்கள் மற்றும் அது தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

| ஆண்டு | செலவின வகை | தேறிய ஏற்பாடு | பயன்படுத்தல் | சேமிப்பு | தேறிய ஏற்பாட்டின் சதவீதமாக சேமிப்பு |
|---|---|---|---|---|---|
| | | ரூபா.மில்லியன் | ரூபா.மில்லியன் | ரூபா.மில்லியன் | |
| 2013 | மீண்டுவரும் | 3,775.17 | 3,761.32 | 13.85 | 0.37 |
| | மூலதன | 1,020.74 | 910.57 | 110.17 | 10.79 |
| | **மொத்தம்** | **4,795.91** | **4,671.89** | **124.02** | **2.59** |
| 2014 | மீண்டுவரும் | 4,075.55 | 4,053.69 | 21.86 | 0.54 |
| | மூலதன | 1,026.90 | 877.42 | 149.48 | 14.56 |
| | **மொத்தம்** | 5,102.45 | **4,931.11** | **171.34** | **3.36** |
| 2015 | மீண்டுவரும் | 5,061.93 | 4,992.98 | 68.95 | 1.36 |
| | மூலதன | 1,205.09 | 824.06 | 381.03 | 31.62 |
| | **மொத்தம்** | **6,267.02** | **5,817,04** | **449.98** | **7.18** |
| 2016 | மீண்டுவரும் | 5,488.03 | 5,352.67 | 135.36 | 2.47 |
| | மூலதன | 1,454.65 | 1,223.18 | 231.47 | 15.91 |
| | **மொத்தம்** | **6,942.68** | **6,575.85** | **366.83** | **5.28** |
| 2017 | மீண்டுவரும் | 5,632.26 | 5,618.86 | 13.40 | 0.24 |
| | மூலதன | 2,549.55 | 1,761.99 | 787.55 | 30.89 |
| | **மொத்தம்** | **8,181.81** | **7,380.86** | **800.95** | **9.79** |

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 03 செலவு விடயங்களுக்காக ஒதுக்கியிருந்த ரூபா 10.75 மில்லியன் இற்கான மொத்த தேறிய ஏற்பாடுகளில் எதனையும் பயன்படுத்தாமல் முழுவதும் சேமிக்கப்பட்டிருந்தது.

(ஆ) 10 மூலதன செலவு விடயங்கள் மற்றும் 03 மீண்டுவரும் செலவு விடயங்களின் கூட்டுத்தொகை ரூபா 608.27 மில்லியன் மிகை ஏற்பாடு செய்திருந்தமையால் அந்த செலவு விடயங்களுக்கான கூட்டுத்தொகை ரூபா 532.88 மில்லியன் மாத்திரம் பயன்படுத்தப்பட்டிருந்ததால் சேமிப்பு ஒதுக்கப்பட்ட தேறிய ஏற்பாடுகளில் 16 சதவீதம் முதல் 97 சதவீதம் வரையான வீச்சு அளவினைக் கொண்டிருந்தது.

(இ) வருடாந்தம் மீண்டுஎழும் சேவைகள் அல்லது வழங்கல்களின் கீழ்வராத வரவு 07 மீண்டுவரும் செலவு விடயங்களில் ரூபா 18,413,050 தொகை மற்றும் 02 மூலதன செலவு விடயங்களின் ரூபா 1,221,258 தொகை ஏற்பாடுகள் மிகைத்து பொறுப்புக்களுக்காக கடப்பட்டிருந்தது.

## 2.7 அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்கு

நீதிமன்ற நிருவாக திணைக்களத்திற்கான 22801 விடய இலக்கத்தின் கீழ் அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்கிற்காக பாராளுமன்றத்தினால் விதிக்கப்பட்டிருந்த எல்லைகள் மற்றும் உள்ளபடியான பெறுமதிகள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

| செலவினம் | | பெறுவனவுகள் | | வரவு மீதி | |
|---|---|---|---|---|---|
| ஆகக் கூடிய எல்லை | உள்ளபடி யானது | ஆகக் குறை ந்த எல்லை | உள்ளபடி யானது | ஆகக் கூடிய எல்லை | உள்ளபடி யானது |
| ரூபா. மில்லியன் | ரூபா. மில்லியன் | ரூபா. மில்லியன் | ரூபா. மில்லியன் | ரூபா. மில்லியன் | ரூபா. மில்லியன் |
| 475.00 | 469.35 | 280.00 | 309.82 | 1,400.00 | 1,140.55 |

இது தொடர்பாக பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) கணக்காய்விற்கு சமர்ப்பித்திருந்த இணக்கக் கூற்றுக்களின் பிரகாரம் அத்திகதியில் உள்ளவாறு அறவீடுகள் நிலுவையாக காணப்பட்ட மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 22,668,534 தொகையாகக் காணப்பட்டதுடன், அவற்றில் ரூபா 6,166,219 தொகை 2018.09.30 திகதியில் உள்ளவாறு அறவிடப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் மேலும் அறவிடப்பட வேண்டிக் காணப்பட்ட ரூபா 16,502,315 இற்கான கடன் மீதியொன்று காணப்பட்டதுடன் அந்த கடன் மீதி 03 மாதங்கள் முதல் 05 வருடங்கள் வரை காலவீச்சில் காணப்பட்ட கடன் மீதிகள் என அவதானிக்கப்பட்டது.

(ஆ) 2017 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு தனிப்பட்ட மீதி வகைப்படுத்தல் பொழிப்பின் கூட்டுத்தொகை மற்றும் திணைக்களத்தின் கட்டுப்பாட்டுக் கணக்கின் மீதி இணங்கியிருக்காததுடன் ரூபா 13,313,341 இற்கான வித்தியாசமொன்று அவதானிக்கப்பட்டது.

(இ) கண்டி நீதிமன்ற வலயத்தை சேர்ந்த இடமாற்றம் பெற்று வந்திருந்த உத்தியோகத்தர் ஒருவருக்காக வேறு அமைச்சுக்கள்/ திணைக்களங்களுக்கு தீர்க்கப்பட வேண்டிய ரூபா 22,380 இற்கான கடன் மீதி ஐந்து வருடங்களை விட மிகையான காலம் கடந்திருந்த போதிலும் தீர்த்திருக்கவில்லை.

## 2.8 பொது வைப்புக் கணக்கு

திணைக்களத்தின் கீழுள்ள 05 பொது வைப்புக்களில் 2017 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 9,353.97 மில்லியன் ஆகக் காணப்பட்டது. ரூபா 9,353,974,740 தொகைக்கான நீதிமன்ற வலயங்களின் மொத்த வைப்புக்கள் தொடர்பாக காலப்பகுப்பாய்வு ஒன்று சமர்ப்பித்திருக்காததுடன் நீதிமன்ற நிருவாக தொடர்பாக அமைச்சில் காணப்படும் வைப்புக் கணக்குகளுக்காக மாத்திரம் காலப்பகுப்பாய்வு சமர்ப்பிக்கப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் இரண்டு வருடங்களை மிகைத்துள்ள ரூபா 17,044,659 தொகைக்கான வைப்புக்கள் தொடர்பாக நிதிப் பிரமாணம் 571 இன் பிரகாரம் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

## 2.9 பதிவேடுகள் மற்றும் புத்தகங்கள் பேணப்படாமை

திணைக்களத்தினால் பின்வரும் விலைமனு அழைப்புக் பதிவேடு பேணப்பட்டிருக்காததுடன் ஏனைய இரண்டு பதிவேடுகள் முறைப்படி மற்றும் நாளது வரை பேணப்பட்டிருக்கவில்லை என தெரிவுக் கணக்காய்வின் பரிசோதனைகளின் போது அவதானிக்கப்பட்டது.

| | பதிவேட்டின் வகை | உரிய பிரமாணம் |
|---|---|---|
| (அ) | விலைமனு அழைப்புப் பதிவேடு | அரச பெறுகை வழிகாட்டல் கோவையின் வழிகாட்டல் 5.2.1 |
| (ஆ) | நிலையான சொத்துக்கள் பதிவேடு | 1978 திசெம்பர் 19 திகதிய 842 ஆம் இலக்க திறைசேரி சுற்றறிக்கை |
| (இ) | கணினி துணைக் கருவிகள் மென்பொருட்கள் தொடர்பாக நிலையான சொத்துக்கள் பதிவேடு | 2002 நவம்பர் 28 திகதி ஐஏஐ/2002/02 ஆம் இலக்க திறைசேரி சுற்றறிக்கை |

## 2.10 சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடன் இணக்கமின்மைகள்

தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனைகளின் போது அவதானிக்கப்பட்ட சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களின் ஏற்பாடுகளுடன் இணக்கமின்மைச் சந்தர்ப்பங்கள் கீழே பகுப்பாய்வு செய்து காட்டப்பட்டுள்ளது.

| சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடன் தொடர்பு | | பெறுமதி | இணக்கமின்மைகள் |
|---|---|---|---|
| | | ரூபா. | |
| (அ) | இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப் பிரமாணக் கோவை | | |
| (i) | நிதிப்பிரமாணம் 109(1) மற்றும் (2) | 1,177,237 | 44 வாகன விபத்துக்கள் உரிய நட்டங்கள் தொடர்பான 01 வருடம் முதல் 09 வருட காலம் கடந்திருந்த போதிலும் நிதிப்பிரமாணங்களின் பிரகாரம் நடவடிக்கை எடுத்திருக்க வில்லை. |
| (ii) | நிதிப்பிரமாணம் 396(ஈ) | 5,977,262 | மீளாய்வாண்டு இறுதியில் உள்ளவாறு 19 உயர் நீதிமன்ற வலயங்களைச் சேர்ந்த 62 வங்கிக் கணக்குகளில் வங்கிக்கு சமர்ப்பிக்கப்படாத 06 மாதங்களைக் கடந்துள்ள ரூபா 5,977,262 தொகைக்கான காசோலை கள் தொடர்பாக நிதிப் பிரமாணங் களின் பிரகாரம் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. |
| (ஆ) | 1987 இன் 03 ஆம் இலக்க பொது ஒப்பந்தவேலை உடன்படிக்கைச் சட்டத்தின் 8 ஆம் பிரிவு | - | 06 நிர்மாணவேலை ஒப்பந்த வேலைகள் தொடர்பாக ஒப்பந்தக் காரர்கள் மற்றும் ஒப்பந்த உடன்படிக்கைகள் பதிவு செய்திருக்கவில்லை. |

| | | | |
|---|---|---|---|
| (இ) | 1978 இன் 41 ஆம் இலக்க நகர அபிவிருத்தி சட்டத்தின் 08ஏ பிரிவு | - | கலகெதர நீதிவான் நீதிமன்றம் நிர்மாணிக்கும் செயற்திட்டத்தின் அலுவல்கள் 2017 மே 04 திகதி பூர்த்தி செய்யப்பட்டிருந்த போதிலும் கணக்காய்வு திகதியாகிய 2017 அக்தோபர் 30 திகதி வரை அபிவிருத்தி அனுமதிப்பத்திரம் பெற்றிருக்காததுடன் மாத்தறை நீதிமன்ற தொடர்கட்டிடம் நிர்மாணி க்கும் ஒப்பந்த வேலைக்காகவும் அபிவிருத்தி அனுமதிப்பத்திரம் பெற்றிருக்கவில்லை. |

**2.11 கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழு**

மீளாய்வாண்டின் போது நீதி அமைச்சின் கீழ் கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழு நிறுவப்பட்டிருந்ததுடன் 2016 ஜனவரி 28 ஆம் திகதி DMA/2009(1)(i) இலக்க முகாமைத்துவக் கணக்காய்வு சுற்றறிக்கையின் பிரகாரம் காலாண்டிற்கு ஒன்று என்ற அடிப்படையில் 04 கூட்டங்கள் நடத்தப்பட வேண்டுமெனினும், 02 கூட்டங்கள் மாத்திரம் நடத்தப்பட்டிருந்தன.

**2.12 மனிதவள முகாமைத்துவம்**

**2.12.1 இணைக்கப்பட்ட பதவியணி மற்றும் உள்ளபடியான பதவியணி மற்றும் ஆளணி வேதனங்களுக்கான செலவினம்**

2017 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு அங்கீகரிக்கப்பட்டுள்ள, உள்ளவாறான, வெற்றிட மற்றும் மிகை பதவியணி மீதான விபரங்கள் கீழே காண்பிக்கப்படுகின்றன. மீளாய்வாண்டிற்கான திணைக்களத்தினால் ஆளணி வேதனங்கள் செலவின தொகுதிக்காக ரூபா 4,485 மில்லியன் தொகை செலவிடப்பட்டிருந்தது.

| | ஊழியர் வகை | அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினர் | உள்ளபடியான பதவியணியினர் | வெற்றிடங்களின் எண்ணிக்கை | மிகைகளின் எண்ணிக்கை |
|---|---|---|---|---|---|
| (i) | சிரேஷ்ட நிலை | 386 | 468 | - | 82 |
| (ii) | மூன்றாம் நிலை | 445 | 234 | 211 | - |
| (iii) | இரண்டாம் நிலை | 4,958 | 4,618 | 340 | - |
| (iv) | ஆரம்ப நிலை | 4,319 | 3,751 | 568 | - |
| | மொத்தம் | 10,108 | 9,071 | 1,119 | 82 |

இது தொடர்பாக பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) மீளாய்வாண்டு இறுதியில் உள்ளவாறு நிரப்ப வேண்டிய ஊழியர் வெற்றிடங்கள் 1119 காணப்பட்ட போதிலும், அங்கீகரிக்கப்பட்ட பதவியணியின் அடிப்படையாகக் கொண்டு மதிப்பீடு தயாரித்து பெற்றுக்கொள்ளும் சம்பளங்கள் வேதனங்கள், மேலதிக நேர மற்றும் விடுமுறை நாள் சம்பளம், பதவியணிக்கு பயிற்சி வழங்கல் ஆகிய செலவு விடயங்களின் ஏற்பாடுகளில் 95 சதவீதத்தை விட மிகையான ஏற்பாடுகள் செலவிடப்பட்டுள்ளன என அவதானிக்கப்பட்டது.

(ஆ) சேர்க்கப்பட்டிருந்த மிகை ஊழியர் எண்ணிக்கை 82 தொகை தொடர்பாக முறையான அங்கீகாரம் ஒன்று பெற்றுக்கொள்வதற்கு நீதிமன்ற நிருவாகத்தில் இயலாதிருந்தது.